மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தேவன் | நாள் | 10.11.2022 |
| தகப்பனார் பெயர் | கண்ணப்ப நாயுடு | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-**

1) என் தாத்தாவின் பெயர் அபாயி நாயுடு ஆகும். 3ம் பிரதிவாதி கண்ணப்ப நாயுடு என் தந்தை ஆவார். கமலா என்பவர் என் தாயார். மேற்படி கண்ணப்ப நாயுடுவிற்கும், கமலாவிற்கும் எத்தனை வாரிசுகள் என்றால், 3 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் உள்ளார்கள்.

2) தனசேகரன், பிரபாகரன், தேவன் ஆகியோர் ஆண் வாரிசுகள். ராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோர்கள் பெண் வாரிசுகள். என் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி கண்ணப்ப நாயுடு என் தந்தை என்ற உறவு முறையும், கமலா என் தாய் என்ற உறவு முறையும் பற்றி நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன்.

3) நான் தடவழி கேட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு எதிராக வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால், சர்வே எண்.359 ஆகும்.

4) தாவா சொத்து போக வேறு எந்தெந்த சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்ணில் எனக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால், என் தாயார் கமலாவின் சொத்துக்கள் எனக்கு மேற்படி சர்வே எண்.359 ல் பாத்தியப்பட்டுள்ளது.

5) தாவா சொத்தும், என் பெயரிலுள்ள மற்ற அனைத்து சொத்துக்களும் என் தாய் தந்தையரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால், சரிதான். என் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு உள்ளதாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன்.

6) மேற்படி சொத்துக்கள் அனைத்தும் என் தாய் தந்தையர் மூலம் தான் எனக்கு கிடைக்கப்பெற்றது என்று நான் குறிப்பாக எதிலும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் 33 செண்ட் நிலத்தை பொறுத்துதான் தாவாவை தாக்கல் செய்துள்ளேன்.

7) என் தந்தை கண்ணப்ப நாயுடுவிற்கு மேட்டுரிலும் சொத்துக்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி என் தாயும், தந்தையும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் எனக்கும், என் தம்பி பிரபாகரன் மற்றும் அவரது வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகளுக்கும் மேலும் என் அண்ணன் தனசேகரனுக்கும் தானசெட்டில்மெண்டாக கொடுத்துவிட்டனர் என்றால், சரிதான்.

8) மேட்டுர் பொன் நகரில் ஒரு தார்சு வீடு என் தந்தை கண்ணப்ப நாயுடுவிற்கு உள்ளது என்றால், சரிதான். மேற்படி தார்சு வீட்டை என் தந்தை வாய்மொழியாக எனக்கு அளித்துவிட்டார் என்றால், இல்லை. இந்த தாவா சொத்தை என் அண்ணன் தனசேகருக்கு என் தந்தை வாய்மொழியாக எனக்கு அளித்துவிட்டார் என்றால், சரிதான்.

9) மேற்படி என் அண்ணன் தனசேகரன் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளின் பராமரிப்பிற்காக மேட்டுர் பொன் நகரில் உள்ள தார்சு வீட்டை அவரது வாரிசுகளுக்கு அளித்துவிட்டு அதற்கு பதிலாக இந்த தாவா சொத்து எனக்கு கிரயமாக கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். 33 செண்டுகள் எனக்கு கொடுக்கப்பட்டது.

10) வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை கண்ணப்ப நாயுடு, கமலா, பிரபாகரன், மரகத மணி மற்றும் அவரது மைனர் மக்கள் சேர்ந்துதான் எனக்கு அளித்துள்ளனர் என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் எத்தனை செண்டு நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 32 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11) வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் 32 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் என் குறுக்கு விசாரணையில் 33 செண்ட் என சொல்லியுள்ளது தவறானது என்றால், 1 செண்ட் நிலம் சரவணன், கமலகண்ணன் நிலத்தில் உள்ளது. மேற்சொன்ன விவரத்தை நான் என் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

12) என் வழக்குரையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்தி விவரங்கள் பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இனிமேல்தான் சொல்ல வேண்டும். தாவா சொத்திற்கு தெற்கு புறமும், மேற்கு புறமும் எனது மற்ற நிலங்கள் உள்ளது என்றால், சரிதான்.

13) என் நிலத்திற்கு வடபுற மூலையில் சுடுகாட்டு நிலம் உள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தாவா சொத்திற்கு வழித்தடம் உள்ளதாக எதுவும் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல. மாமூல் வழித்தடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் தாவா சொத்து விவரத்தில் தடவழி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், என் தாய் கமலா அவர்களின் பெயரிலுள்ள பத்திரத்தில்தான் உள்ளது. குறிப்பாக அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.